செய்தித்தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

உ

சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்; விரோதி௵ (1889) ஆவணி மீ ௩௰உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஉ] யாழ்ப்பாணம்:- சாதாரண௵ புரட்டாதி மீ கசு௳ வெள்ளிக்கிழமை (2-10-1970 [இல-௨௧

# நவராத்திரி விரத மகிமை

## தேவியை பக்தியுடன் வழிபட்டு நற்கதியடைவோமாக

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகலகலா வல்லியே.

(குமரகுருபரசுவாமிகள்)



சுரும்புமுரல் கடிமலர்ப்பூங்
குழல் போற்றி
உத்தரியத் தொடித்தோள்
போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி
கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இருமபுமனங் குழைத்தென்னை
யெடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பிராட்டி
அரும்புமிள நகைபோற்றி
ஆரணநூ
புரஞ்சிலம்பு மடிகள்போற்றி.

(பரஞ்சோதிமுனிவர்)

பண்டிதர், சைவப்புலவர் திரு. வ. சுப்பிரமணியம்
தும்பைநகர் பருத்தித்துறை.

நவராத்திரி. காமிகாகமத்தில் (காமிக + ஆகமம்),

"கந்யாஸித ப்ரதமாம் ஆரப்ய நவமயந்தம் உமா விருதம்".

இதன் பொருள் - புரட்டாதி பூர்வபட்சத்து பிரதமை முதலாக ஆரம்பித்து நவமி முடிய பூசை செய்ய வேண்டும்.

பூர்வ காரணாகமம்:—
"அநாதஸ் ஸம்பிரவக்ஷயாமி
நவராத்திரி விதிக்ரமம்
ஆச்வயுக் சுக்லபக்ஷேது
ப்ரதி பன்னவம் யந்தகே
ப்ரதிபத்தின மாரம்ய
விரதோதஸவ மதாசரேத்."

இதன்பொருள்:- சாந்திர ஐப்பசி மாதத்தில் சுக்கில பக்ஷத்துப் பிரதமை முதல், நவமி முடிவாயுள்ள 9 நாட்களிலும் - பிரதமை தொடங்கி, உத்சவத்தையும், விரதத்தையுஞ் செய்க.

இப் பிரமாணங்களினால், நவராத்திரி புரட்டாதி மீ (உற்சவம்) த்தில் ஆச்வீச சுத்தமானபிரதமையில் ஆரம்பிக்க வேண்டும் என்றுகிறது.

ஆச்வயுக (ஆஸ்விஜ). என்பது = சாந்திரமான ஐப்பசி மாம்.

ஆச்விச - இஷ - அஸ்வயுக என்பவை - ஐப்பசி மாதத்தின் பெயர்கள் என அமரசிம்ஹன் கூறுகிறார்.

யாமள தந்திரத்தில் — 'பாதமாயாம் ஸமாரப்யநவமியந்தம் ப்ர பூஜயேத்' என்பதினாலே, பிரதமை முதற்கொண்டு நவமி முடிய தேவியை பூசிக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது.

பிரதமை தொடங்கி, தசமி வரையில், கன்னியா மாசத்தில்வருதலும், சிறுபான்மை துலா மாத முற் கூற்றில் சமாப்தியாவதும் ஆகமங்களுக்குச் சம்மதம்.

உத்தர காமிகாகமத்தில் 'கந்யாம் தேஸவிதரி, சுக்ல
பக்ஷே ஷடமீயுதா,
மூலநக்ஷத்ர ஸம்யுக்தாஸ
மகாநவமி ஸ்மிருதா"

மகாநவமியாவது - கந்யாரவியாகிய புரட்டாதியிலிருக்க வேண்டும்.

"ஆச்யயுக் சுக்லபக்ஷேவா,
அஷ்டமீ மூல சம்யுதா ஸாம
ஹா நவமீ நாமனு த்ரை
லோக்கிய பிஸ்ரு துர்லபா."

ஐப்பசி மீ சுக்கிலபட்ச அஷ்டமியும் மூலமும் கூடிய நவமி - மஹா நவமி என்று பெயர். இது மூவுலகத்திற்கும் கிடைத்தற்கரியது.

விஜயதசமி சிவ உற்சவமாகும். ஆயினும்,

"நவம் யாம் பூஜயேத்.
தேவீம் தசம் யாமச ஸபீம்"

என்பதினால், யஜேத்:, நவராத்திரி பூசைக்குப் பிறகுதான், விஜயதசமி அனுட்டிக்கவேண்டும், திதிகளின் விருத்தி க்ஷயத்தின் காரணமாய அட்டமி நவமி கூடிய அன்று சரஸ்வதிபூசைசெய்ய வேண்டும்.

புரட்டாதி மாதத்தில் அமாவாசைக்குப் பின் வரும்

(வளர்ச்சி 2- ஆம் பக்கம்)

## யாழ். மத்திய கல்லூரி வர்த்தகக் கல்விப்பொன் விழா

5-10-70 திங்கட்கிழமை மாலை 6 மணிக்குக் கல்லூரி [illegible]துக்கத்தில் பொன்விழா ஆரம்பமாகும். அத்தருணம் கல்லூரியின் வர்த்தகக் கல்விப் பகுதியின் முதல்வராகப் பணியாற்றிய கலைப் புலவர் திரு. க. நவரத்தினம் அவர்களுடைய படம் காகித உற்பத்திக் கூட்டுத் தாபனத் தலைவர் திரு. K. C. தங்கராசா அவர்களாற் திறந்து வைக்கப்படும்,

கலாநிதி S. L. de சில்வா, திரு V. சங்கரலிங்கம், திரு. C. A. M. கொகுலாவல சிறப்புச் சொற் பொழிவாற்றுவார்கள். திருமதி மகேஸ்வரிதேவி நவரத்தினம் பரிசில்கள் வழங்குவார்கள்.

## நவராத்திரி விழா

யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ இராசேசுவரியம்பாள் ஆலயத்தில் நவராத்திரிகாலத்தில் வழமம் பஜனை நடாத்த சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினர் முன் வந்துள்ளனர். (ந. கி.)

## சங்காபிஷேகத் திருவிழா

அண்மையில் கழுத்துறை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் நடைபெற்ற சங்காபிஷேக அலங்காரத் திருவிழாவின்போது கோக்குவில், திருநாவுக்கரசு சுவாமிகள் தமது தலையில் இளநீர்களை உடைக்கும் அற்புதத்தைக் காட்டினார் இதனை அடியார்கள் 'அரோகரா' என்று கோஷமிட்டுத் தரிசித்தனர்.

## இந்து மாமன்றம்

கோண்டாவில் இந்து மாமன்றத்தினது பொதுக்கூட்டம் அண்மையில் கோண்டாவில் கிழக்கு அரசடி விநாயகர் கோயில் முன்றலில் நடைபெற்றது.

## உலக நன்மைக்காக பிரார்த்தனை

5-10-70 திங்கட்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு நல்லூர்க் சந்தசுவாமி கோவிலில் உலக நன்மைக்கான விசேட ஆராதனை, பிரார்த்தனைகளை நடத்த இலங்கை முன்னேற்ற வள்ளுவர் சங்கம் ஒழுங்கு செய்துள்ளது அன்று அறிஞர் - கலைஞர் சபை ஒன்றினை நிறுவுவதுபற்றியும் அச் சபை ஆலோசனை நடத்த உத்தேசித்துள்ளது.

## சிங்களத்தேர்ச்சிபெறுதவர்கள் வேலை நீக்கம்

சிங்களத்தில் தேர்ச்சிபெறுத நான்கு மறியற்சாலை வெளிப்பாதுகாப்பாளர் வேலை நீக்கம் பெற்றுள்ளனர். இவர்களில் இருவர் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தையும், மற்றுமிருவர் வவுனியா மல்லாகம் நீதிமன்றத்தைச் சேர்ந்தவர்களாகும்.

## கழுத்துறை ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவில்

[சிவஸ்ரீ சு. பஞ்சாட்சர ஐயர்]

காலு கங்கை கடலோடு கலக்குமிடத்து அமைந்துள்ளது கழுத்துறை என்னும் கவின் நகர். இதுவே முன்னர் வேலாபுரமெனவும் வழங்கலாயிற்று. இஃது ஈழநாட்டின் மேல் மாகாணத்தில் அமைந்துள்ளது.

இந் நன்னகரில் வேண்டுவார் வேண்டுவதை ஈகின்றவனும், தம்மை வைதாரையும் வாழவைப்பவனும், கலியுக வரதனுமாகிய ஸ்ரீ முருகன், ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி என்னும் திருநாமத்தோடு கோவில் கொண்டெழுந்தருளியுள்ளார்

இவ்வாலயத்தில் விநாயகர், வேலாயுதர், தண்டாயுதபாணி, வள்ளி தெய்வயானை சமேத கதிர்வேலாயுதர், அம்பாள், நவக்கிரகங்கள், வைரவர், விநாயகர் முதலிய மூர்த்திகள் உள இங்கே உஷக்காலம், உச்சிக்காலம், சாயங்காலம் ஆகிய முப்பொழுதும் பூசைகள் நடைபெறுகின்றன. வெள்ளிதோறும் சாயங்காலப் பூசை சிறப்பாக நடைபெறுகின்றது. தேவாரம் முதலிய தோத்திர ப்பாக்கள் ஓதப்படுகின்றன. இவ்வழிபாட்டில் அடியார் பலர் கலந்துகொள்கின்றனர்.

இக் கோவிலில் தைப்பூசம், மாசி மாதத்துச் சிவராத்திரி, சித்திரை வருடப்பிறப்பு, கந்த சஷ்டி முதலாய புண்ணிய தினங்களில் ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமிக்கு விசேஷ பூசைகள் நிகழுகின்றன. பிரதி வருஷமும் ஆவணி மாதத்தில் உத்தரட்டாதி நட்சத்திரத்தில் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிக்கும் மற்றும் பரிவாரமூர்த்திகளுக்கும் மகா சங்காபிஷேகம் நடைபெறுகின்றது. இதனைத் தொடர்ந்து திருக்கல்யாணம், திருவூஞ்சல் ஆகிய வைபவங்களின் பின்னர், வள்ளி தெய்வயானை சமேத ஸ்ரீ கதிர்வேலாதர் பவனி வந்து அடியார்களுக்குக் காட்சி கொடுப்பார் இத் திருக்காட்சியைத் தரிசித்து முருகனருளைப் பெறுவதற்காகப் பல அடியார்கள் கூடுகின்றனர். இத திருவிழா இவ்வருடம் கடந்த 16-9-70 புதன்கிழமை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இத் திருவிழாக் காலத்தில் அடியார்களுக்கு அன்னம் பாலித்தலும் நடைபெறுகின்றது.

கதிர்காமக் கந்தனைத் தரிசிக்கச்செல்லும் பக்தர்களும் தரிசித்தபின் இல்லமேகும் பக்தர்களும் இவ்வாலயத்தையும் தரிசித்துச் செல்லுகின்றனர். மக்கள் பலர் கதிர்வேலாயுத சுவாமி சந்நிதியில் விவாகம் செய்து பலவகையான செல்

(வளர்ச்சி 4- ஆம் பக்கம்)

## ஆண்டு விழாவும் நவராத்திரியும்

திருநெல்வேலி சைவ முன்னேற்றக் கழகத்தின் இரண்டாவது ஆண்டு விழாவும் நவராத்திரி விழாவும், யாழ்ப்பாணம் பரமேஸ்வராச் சந்தி விநாயகர் கோவில்முன்றலில் நேற்று ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சாதாரண ௵ புரட்டாதி ௴ கசு-உ வெள்ளிக்கிழமை [1970]


## நவராத்திரி நோன்பு

சிவபெருமானது அருட்சக்தி உமாதேவியார் "தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும்சத்தி பின்னமிலான் எங்கள் பிரான்" சிவபெருமான் உலகத்திலுள்ள ஆன்மாக்கள் தன்னுடைய நிலைமையை யடையவேண்டுமென்ற கிருபையையுடையவர் அக்கிருபையே அவரது சத்தி அச்சத்தி சிவபெருமானுடன் நெருப்பும் சூடும்போலவும் பூவும் மணமும்போலவும் மணியும் ஒளியும்போலவும் அபின்னமாக விருக்கும் நெருப்பின்கண்ணுள்ள சூடு பல வகையாகத் தொழிற்படும். அது ஒரு சமயம் வறுக்கும். ஒரு சமயம் பொரிக்கும். ஒரு சமயம் அவிக்கும். அதுபோல சிவபெருமானுடைய சத்தியும் வெவ்வேறு தொழில்களைப் புரியும. புரட்டாதி மாதம பூர்வபக்கப் பிரதமைத் திதியிலன்று நவராத்திரி விரதம ஆரம்பமாகும், அவ் விரதம் 9 நாட்களில அநுட்டிக்கப்படும். முதல் மூன்று நாட்களும துர்க்காதேவியினுடைய வழிபாட்டுக்குரிய காலம், அடுத்த மூன்று நாட்களும் இலக்குமி தேவியினுடைய வழிபாட்டுக்குரிய காலம் கடைசி மூன்று நாட்களும் சரசுவதி தேவியினுடைய வழிபாட்டுக்குரிய காலம். ஒருவன் துர்க்கையை வழிபடுவதினுல் வீரத்தையும், இலக்குமியை வழிபடுவதினுல் செல்வத்தையும், சரசுவதியை வழிபடுவதினுல் கல்வியையும அடைவான. 10-ஆம் நாள் விஜயதசமி தினம். அன்று சிறு பிள்ளைகளுக்கு வித்தியாரம்பம் செய்து வைத்தல் உத்தமம் தொழிலாளர்கள் தங்கள் ஆயுதங்களுக்குப் பூசை புரிந்து அத்தினத்தில் நாள் வேலையை ஆரமபிப்பார்கள்

நவராத்திரி தினங்களில் தேவியை வழிபடுகின்றவர்கள் விரதமநுட்டித்தல உத்தமம். விரதங்களை அநுட்டிப்பதனுல மனிதனுடைய உடல், மனம் முதலிய கரணங்கள் தூய்மையடைகின்றன அதனுல அவன மனத்தினுல் நற்சிந்தனைகளைச் சிந்திப்பான். வாக்கினுல் நல்ல வார்த்தைகளை உரைப்பவான். உடலினுல நல்ல கருமங்களைப் புரிவான். நவராத்திரி விரதம் மனிதனைத் தெய்வமாக்கும். அவ் விரதத்தினை யாவரும் நோறறு நற் பயனடைவார்களாக.

## கேணல் கமால் அப்துல் நாஸர் அவர்களின் மறைவு

ஜனுதிபதி கமால் அப்துல் நாஸர் அவர்களின் மறைவு உலகம முழுவதும் கவலையைப் பரப்பியுள்ளது. அவருககு அஞ்சலி செய்யும் வகையில் இலங்கை அரசாங்கம் இரு தினங்களைத் துககதினமாகப் பிரகடனஞ் செய்துளளது. இறுதிச் சடங்குகளில் உலக நாடுகளின் தலைவர்களும் பிரதிநிதிகளும கலந்து கொளவார்கள். இலங்கைப் பிரதமரும் சமூகமளிப்பார். இந்தியாவின் சார்பில உப அதிபர் பர்த்தக அவர்களும அமைச்சர் தினேசிங் அவர்களும் கலந்து கொள்வார்கள. அரபு மககளின உயர்வுக்காக உழைத்த பெருந தலைவர். அபிவிருத்தியடையும நாடுகளுககு உதவி புரியும மனம் படைத்தவர். தான எடுத்துக்கொண்ட இலட்சியத்துக்கு அயராது உழைத்த பெரியார் நாஸர். ஐக்கிய அரபுக் குடியரசுககு வித்திட்டவர். மன்னர் ஆட்சியிலிருந்த எகிப்தை மக்கள் ஆட்சியின்கீழ் கொணடுவந்த தலைவர். அவரது மறைவு உலகுககுப் பெரிய நஷ்டமாகும்.

## நவராத்திரி விழா

குருநாகல் சைவமகா சபை மண்டபத்தில் நவராத்திரி விழா 1-10-70 தொடக்கம் 10-10-70 வரை நடாத்தப்படும். பூசை, கூட்டுப்பிரார்த்தனை, சமயச் சொற்பொழிவுகள், இசைநிகழ்ச்சிகள் இடம்பெறும். 10-10-70 சனிக்கிழமை விஜயதசமியன்று வித்தியாரம்பமும் செய்யப்பெறும்.


### இந்துசாதனம்

திருத்திய வருடசந்தாவிகிதம்

| | |
|---|---|
| உள்நாடு | |
| ஆங்கிலம | 10-00 |
| தமிழ் | 10-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 15-00 |
| வெளிநாடு | |
| ஆங்கிலம் | 12-00 |
| தமிழ் | 12-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 18-00 |


# சைவ சமயம்

உலகில் முக்கியமாக விளங்கும் சமயங்கள் (4) நான்கு சைவ சமயம், முகமது சமயம், கிறீஸ்து சமயம் பௌத்த சமயம்; முகம்மது சமயம் இற்றைக்கு 1500 வருடங்களுக்குமுன் முகமத் என்னும் பெரியாரால் உண்டாக்கப்பட்டது கிறீஸ்து சமயம் 2000 வருடங்களுக்கு முன் யேசுகிறீஸ்து என்னும் பெரியாரால்உண்டாக்கப்பட்டது பௌத்த சமயம் 2500 வருடங்கட்குமுன் கௌதம புத்தரால் உண்டாக்கப்பட்டது சைவசமயம் எம்பெருமான் - சிவபெருமானுல்உண்டாக்கப்பட்டது என்று சிவம் உண்டோ அன்று சைவமும் உண்டு சிவபெருமான் என்றுல் கடவுள், கடவுள் என்றுல் எலலாவற்றிற்கும் அப்பாற்பட்டவர் பற்று அற்றவர், "பற்றுக பற்றற்றுன் பற்றினை அப்பற்றைப் பற்றுக, பற்று விடற்கு" சிவபெருமான் எங்கும் நிறைநதவர். எலலாம் வல்லவர் எல்லாமறிந்தவர். ஞானமேதான் உருவாகிய நாயகன், பசுபதீஸ்வரர் வேண்டுவார் வேண்டுவதைக் கொடுத்து இரட்சிப்பவர், ஆன்ம கோடிகட்கெல்லாம் பக்குவமறிந்து மோட்சம் தருபவர். கைநாகத்திற்கும் கயவாய்க்கும் நாரைக்கும் பைநாகத்திற்கும் படரும் சிலந்திக்கும பின்னுகிய உயிர்க்கும் பேரருள்செய்த பெருந்தகை.

அபயம் - வரதம் ஆகிய திருக் கரங்களினுல் ஆன்மாக்களை தன்பாததகில் சேர்க்கும் பரம கருணைநிதி, ஆன்மாக்கள் வழிதவறிச் செல்லுகின்ருர்கள் என்று இரங்கும் அப்பன் அமெரிக்காவின் பெருமை, ஜனுதிபதியின் செயல்களில் தங்கி நிற்குமாப்போல் சைவசமயத்தின் பெருமை சிவபெருமானின் கிருபாசமுத்திரத்தில் தங்கி நிற்கின்றது. மற்றச் சமயங்களை உணடாக்கிய கௌதமபுத்தர்,கிறிஸ்து, முகமத் இவர்களெல்லாம உலகத்திற்கு நற்போதனைகளைச் செய்ய கடவுளால் அனுப்பபபட்ட தேவதூதுவர்கள். கடவுளர் அல்ல. சிவபெருமான் ஒருவரே கடவுள். சைவ சமயம் ஒன்றே பஞ்சமாபாதங்களை ஒதுக்கித தள்ளியசமயம். உலகிலுள்ள எத்தனையோ புறச்சமயத்தவர் பலர் சைவத்தின் உண்மையை அறிந்து (உண்மை என்றுல்) மோட்சம் தரும் சமயம் என்று, இச்சமயத்திற்கு வந்து தம் நோக்கங்களைப் பெற்றிருக்கிருர்கள்! மேதைகள்தான் இச் சமயத்திற்கு வருவது. ஒரு காலத்தில் சைவம எங்கும் பரவியிருந்தது. உதாரணமாக, புதைபொருள் ஆராய்ச்சிக்காரரால் கண்டு எடுக்கப்பெற்ற சிவவிக்கிரகங்களும் தேவிவிக்கிரகங்களும் இதனை அத்தாட்சிப்படுத்துகின்றன. தமிழ் பாஷை உலகமெங்கும் ஒரு காலம் பரவி இருந்தது தமிழ் இருந்த இடமெல்லாம் சைவம் இருந்தது தமிழ் தான் சைவம் — சைவம் தான் தமிழ்; சைவ சமயத்

## நவராத்திரி விரத...

[1-ஆம் பக்கத்து வளர்ச்சி]

ஒன்பது நாளும் (பிரதமை தொடங்கி நவமி முடியும் வரையுமுள்ள நாட்கள் ) நவராத்திரிஎனப்படும், பூசை சிறப்பாகச் செய்யப்படுவது, இராக் காலத்திலாதலால் - இராத்திரி எனப்படும். இந்த 9 நாட்களிலும் உமாதேவியாருக்கும் துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதியாகிய சக்திகளுக்கும் விசேஷ பூசை நடைபெறும். உற்சவங்கள் நடப்பதுமுண்டு துர்க்கை வீரத்தையும், இலக்குமி செல்வத்தையும், சரஸ்வதி கல்வியையும் கொடுக்குச் சக்திகளாம்.

### பூசை முறை

மண்டபத்தின் நடுவிலே உமாதேவியாருக்கு ஒரு கும்பமும், அதற்கு வடக்கே இலட்சுமிக்கொன்றும் அதற்குத் தெற்கே சரஸ்வதிக்கொன்றும் வைக்கப்படும். உமாதேவியாரது கும்பத்திலே துர்க்கைக்கும் பூசை செய்யப்படும். இந்த நான்கு தேவிகளுக்கும் ஒன்பது நாளும் பூசை நடைபெறும். முதல் 3 நாளும் உமையம்மையாருக்கும் அடுத்த 3 நாளும் இலக்குமிக்கும் அடுத்த 3 நாளும் சரஸ்வதிக்கும் பூசை நடைபெறும்

உமையம்மையார் பூசையில், தநு, கரண புவன

...தின் உயிரான, தேவார திருவாசகங்களெல்லாம் தமிழில் பாடப்பெற்று, தமிழில் பொறிக்கப்பெற்றிருக்கின்றன.

"சைவத்தின் மேற்சமயம்
வேறில்லை
அதிற் சார்சிவமாம்
தெய்வத்தின்மேற் தெய்வமில்லை'

சைவ சமயமே சமயம்,
சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள்
வெளிகாட்டும்
இந்தக் கருத்தைவிட்டு,
பொய்வந் துழலும் சமயநெறி
வேண்டாம் முத்தி தரும்
தெய்வச பையைச்
காண்பதற்கு
சேரவாரும் செகத்தீரே"

யாதொரு தெய்வங் கொண்டீர்
அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனுர்தாம்
வருவர்மற் றத்தெய்வங்கள்
வேதனை படுமிறக்கும் பிறக்கும்
மேல் வினையும்செய்யும்
ஆதலா னிவையிலாதான்
அறிந்தருள் செய்வனன்றே

"திருநீறிட்டார் கெட்டார்
சிவனைமறந்தார் வாழ்ந்தார்"

விளக்கம்:

நெற்றியில் திருநீறு இட்டு, யார் கெட்டார். சிவனை மறந்து யார் வாழ்ந்தார்.

சைவ சமயத்தின் பெருமையை அறிய வேண்டுமானுல் சமய குரவர், சந்தான குரவர் மூலம் அறியலாம்.

நா. சேனுதிராசா,
யாழ் சைவசித்தாந்த சங்கத் தலைவர்.
சுளிபுரம்: 20-9-70.

### நாவலர் நல்வாக்கு

தரித்திரனுய் இருக்கும் போது திருத்தி அடையாதவன், செல்வனுய போதும், திருத்தியடையான்; திருத்தியடையாமை மனக் குற்றமே அன்றிப் பொருட் குற்றம் அன்று.

போகங்கள் படைத்தருளுதலும், இலக்குமி பூசையில், அட்ட ஐசுவரியங்களும் தந்து காத்தருளுதலும், சரஸ்வதி பூசையில் அஞ்ஞானத்தை நீக்கி ஞானந் தந்தருளுதலும் அறிவுறுத்தப் பெறுகின்றன. பத்தாம் நாள் விஜய தசமியில் அசுரர்களைக் கொன்று எம்மை மீட்டு, அம்மையார் பேரின்பம் தந்தருளுதல் அறிவுறுத்தப்படுகின்றது.

### மகிடாசுரன் கதை

(அருணுசலபுராணத்தில் பின்வருமாறு)

மகிடன் என்ற ஓர் அசுரன் இருந்தான். அவன் யாவரிலும் மிக்க பலசாலி, நஞ்சிலுங் கொடியவன் இந்திரன் முதலிய தேவர்களை அடக்கி அவர்களுக்குங் கொடுமை செய்தான். ஒரு நாள் அவனுடைய சாப்பாட்டுக்காக, மிருகங்களைத்தேடி வேட்டையாடுதற்கு ஆயிரம் ஏவற்காரர் காட்டுக்குப்போனுர்கள். காட்டிலிருந்த தேவர்கள் அவர்களைக் கொன்று விட்டார்கள். இதனை மகிடனுடைய தூதர்கள் அவனுக்குத் தெரிவிக்க அதைக்கேட்ட அவனுடைய படைத் தலைவன் சேனைகளோடு போருக்குப் போய் தோல்வியடைந்து இறந்தான். மகிடன் இதை அறிந்து கோபங் கொண்டு தன் படைகளோடு காட்டுக்குப் போனுன். அப்பொழுது உமாதேவியார் துர்க்காதேவி வடிவங் கொண்டு சக்கராயுதத்தினுலேஅவனது தலையை வெட்ட, அவன் யானையானுன். யானை அழிக்கப்படக் குதிரையானுன். பின்பு நெருப்பானுன் இப்படியே பலவித ரூபங் கொண்டான். ஈற்றில் பழையபடி எருமைத் தலையோடு தோன்றினுன். அப்போது துர்க்கையம்மன் அவனைக் கொன்று, அவனுடைய தலையைத் திருவடியால் மிதித்தனர். அதன் பின் வேறுருவங்கொள்ளாது நற்கதியடைந்தான்.

இச் கதையின் ஞானர்த்தமாவது: மலத்தினுல் அறிவு கெட்ட ஆன்மா மகிடன்) கடவுளை மதியாது நடத்தலையும், மலத்தின் சத்திகள் ஒவ்வொன்றுங் கெடக் கெட வேறென்று தோன்றி ஆன்மாவினின்று முளைத்தலையும் ஈற்றிலே யாவுங் கெட்ட பின், சிவ சத்தியின் திருவடியாகிய மெய்ஞ் ஞானத்தைப் பெறுதலையும் குறிக்கின்றது என்று கொள்ளலாம்.

9 ஆம் நாள் மகிடாசுரனை துர்க்காதேவி கொன்ற பாவனை காட்டப்படும். நான்கு சத்திகளுக்கும் விசேஷ பூசை செய்யப்படும் நவமியாதலால் மகா நவமி எனப்படும். நவமியில் முடியத்தக்கதாக, ஏழு நாளாகவும், ஐந்து நாளாகவும், மூன்று நாளாகவும, ஒரு நாளாகவும் பூசைசெய்வதுமுண்டு.

## நவராத்திரி விரத...

(2-ம் பக்கத்து வளர்ச்சி)

### மானம்பூ

இந்த நவமிக்கு அடுத்த நாள் மானம்பூ என்றும், விஜயதசமி என்றும் சொல்லப்படும். மானம்பூ என்பதற்குத் தலைவர் அம்புபோடும் நாள் என்ற கருத்துக் கொள்வர். (மான் - பெரியவர்; சிவபெருமான) அன்றைக்கு ஒவ்வொரு கோயிலுமுள்ள பிரதான மூர்த்தியைப் (சிவன்கோவிலில் சிவபெருமான், சுப்பிரமணியர் கோவிலில் சுப்பிரமணியர்.........) பூசித்து கோயிலுக்கு வெளியே அம்பு போடும் இடத்திற்கு எழுந்தருளச் செய்வர். கடவுள் அம்பு போட்டுக் கொல்வது அசுரனையே. அசுரன் எனப்பட்டது ஆன்மாக்களை வருத்தும் மலமாம்.

ஒரு வன்னி மரத்தை நட்டு, அதை அந்த அசுரனுகப் பாவித்து, அந்த மரத்திலே அம்பு போட்டு அதைத் துணிக்கும் பாவனை காட்டப்படும். வன்னிமரம் அரிதாதலால் ஒரு வன்னிமரக் கொப்பை வாழை மரத்தில் பதித்து வாளினுல் துணிப்பதுமுண்டு. சகல ஆன்மாக்களும் சுகமடைவதற்காக இது செயயப்படுவது, ஒன்பது நாளும சிவசக்திகளுக்குச் செய்த பூசையின் பலனுல், அடுத்த நாள் எந்தக் காரியமும் கைகூடுமாதலால், அந்நாளுக்கு விசய தசமி என்று பெயர். (விசயம - வெற்றி) அன்றைக்கு படிப்புதொடங்குவது நன்று.

ஒன்பது நாளும் பூசை செய்ய இயலாதவர்கள் கடைசி மூன்று நாளும் ஏடு, புஸ்தங்கள் வைத்து சரஸ்வதிக்குரிய தியானம், அருச்சனை முதலியவற்றைச் செய்து, ஒருபோது போசனஞ் செய்தல் வேண்டும் இந்த மூன்று நாட்களிலும புஸ்தங்களிற் படிக்கவும், எழுத்துக்களை எழுதவுங் கூடாது. இத்தினம் சரஸ்வதி பூசை என்றும், ஆயுத பூசை என்றும் சொல்லப்படும்.

சரஸ்வதிக்கு அறிகுறியாகப் புஸ்தகங்களைக் கொள்வது போல சரீர பலத்திற்கும் போர் வீரத்திற்தம் உருவமாயேற்பட்ட துர்க்கைக்கு ஸ்தூல அறிகுறியாக ஆயுதங்களைக் கொண்டு, அவைகளை இந்தக் கடைசித் தினத்தில் பூசிப்பது வழக்கம். ஆயுதங்களை நன்ருகத் துலக்கி அவற்றிற்குங் குங்குமம், சந்தனம், புஷ்பம் முதலியன இட்டு அலங்கரித்து தூப தீபங்கள், கர்ப்பூர ஆராதிகள் முதலிய உபசாரங்கள்செய்து, தொழுவதும் வழக்கம். இதுவே ஆயுத பூசை.

மேலே கூறியபடி, துர்க்கையின் சுபரூபம்-சரீரபலம், உக்கிரம் போர் வீரத்திறம் குறிக்கின்றமையின் - இந்தியாவில் - முக்கியமாக வட இந்தியாவிலும், சுதேச இராச்சியங்களிலும் சனங்கள் ஆயுத பூசைத் தினத்தில் வெகு உற்சாகத்துடன் தத்தம் புஜபல பராக்கிரமங்களைக் காட்டுவார்கள். எங்கே பார்த்தாலும், குஸ்தியும், கசரத்தும், வேடிக்கையும் பந்தயமுமாயிருக்கும். இது தேகப் பயிற்சிக்காக ஏற்பட்டதோர் நியமனமாகும்.

பிரதமை முதல் நவமியீருகிய 9 நாளும் மேலே சொல்லியபடி கும்பத்திலே பூசை செய்து அநுட்டிக்கும் விரதத்தில் முதல் எட்டுநாளும் பணிகாரம், பழம் முதலியவையுட்கொண்டு மகாநவமியில் உபவாசம் செய்தல் வேண்டும்.

"பத்தாம் நாளாகிய விஜய தசமியில் சமிவிருட்சம்எனப்படும் வன்னி மரத்தைப் பூசிக்கவேண்டுமென்று சாஸ்திரங்கள் கூறும். தன்னை வழிபடுவோர் பாவத்தைச் சமிக்கச் செய்வதால் "சமீ" எனப் பெயருண்டாயிற்று பாவங்களை நீக்குவதற்கும் உரியபேராற்றல் இந்த மரத்திற்கு உண்டு. இந்த வன்னி மரம ஏனைய மரங்களைப் போல, எவ்விடங்களிலும் காணக் கிடையாது.

பாண்டவர்கள் அஞ்ஞாத வாசத்தில் இந்த மரப்பொந்தில் தங்களுடைய ஆயுதங்களை மறைத்து வைத்து, விராட நகரம்போய், பசுநிரைமீட்க, நவராத்திரியின் அடுத்த நாளாகிய தசமித் திதியில் எடுத்து, வெற்றியடைந்தார்கள்.

எந்த நாளிலும் சூரிய அஸ்தமனகாலம் விஜயமுகூர்த்தயோகம் என்று பெயர். அந்த நேரத்தில் செய்யப்படுங் கர்மங்கள் விஜயத்தைக் கொடுக்கும் என்பது சோதிடநூற் றுணிபு. ஆகையால் இந்த முகூர்த்த நேரத்தில், தமது வீட்டிலிருந்து வடக்கு முகமாகச் சிறிது தூரம் போய் வருவார்களாயின், அவரவர்கள் மனதில் நினைத்த கருமங்கள் அடுத்த விஜயதசமி வரையில் செவ்வனே சித்தியாம். அத்தருணம் சுபசகுனம் இருந்தால் மிகவும் நல்லது.

## இந்திரனுக்கு வந்த...

4-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

டான். ஒரு கொடிய அக்கினி யாகத்தைச் செய்தான். அந்த யாகாக்கினியிலே ஓர் வீரன் தோன்றினுன். அவன் பெயர் விருத்திராசுரன். ஒவ்வொரு நாளும் வலிய அம்பு விடுகின்ற தூரம் வரை வளருவான். அதற்கேற்பப் பருப்பான். அவன் ஒவ்வொரு நாளும் விரைவாக பருப்பதற்கு பரஞ்சோதி முனிவர் ஓர் சிறந்த உதாரணம் கூறுகின்ருர். அறனே செய்யாதவர்கள் செய்யும் பாவம் மிக விரைவாக வளரும். அந்தப் பாவத்தைப்போல பருத்தான் என்று கூறுகிருர்.

"எங்குவன் விருத்திர
னென்ப வாரழற்
றாங்குவன் கணைவிடு தூர
நீண்டு நீண்
டோங்குவ னோங்குதற்
கோப்ப வைகலும்
வீங்குவ னறனிலார்
வினையினேன்னவே"

---

## அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 284-ம் நம்பர் கடையில் திரு. கா. ந. இளையதம்பி அவர்களிடம் 1969-ம் ஆண்டு யூன் (ஆனி) மாதம் 1-ம திகதி (1-6-69) திகதிக்கு முன் வைத்த அடைவு நகைகளில் 18-10-70 திகதிக்கு முன் மீட்கப்படாதவை 1970ம் ஆண்டு ஒக்டோபர் (ஐப்பசி) மாதம் 21-ம் திகதி (21-10-70) புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
ஏலவிற்பனவாளர்

"இராசகிரி"
643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
எம். 286 25-9, 2-10-70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

உரும்பிராய் வடக்கு நாகலிங்கம் ராசையா —வழக்காளி
இல: M B 10339 எதிராக
பத்தைமேனி, 1. சுவாமிநாதர் நாகேசு
2. பெண் நாகம்மா —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10339ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிககப்படும் துண்டுக்காணி 1970ம் ஆண்டு ஐப்பசிமீ 31ம் திகதி (31-10-70) சனிக்கிழமை மூற்பகல் 10 மணிக்கு முதலாம் காணியும், 10-30 மணிக்கு இரண்டாம் காணியும், முறையே அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 9215/-ம், 30-9-68 தொடக்கம் 11-4-69 வரைக்கும் ரூபாய் 5000/-கரு 9 வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 338-70 சதம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பிரிவு அச்சுவேலி கோயிற்பற்று பத்தைமேனியிறை 'மாவி ஓடைத்தோட்டம்' பர. நில. இலா 7 கிணறு தென்னை மரங்களுடன் இதற்கெல்லை கிழக்கு சின்னத்தம்பி கந்தையாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், வடக்கு ஒழுங்கை. மேற்கு தம்பு சி தருவுக்கும் பங்காளருக்குமுரியவாதனம். தெற்கு பழையரோட்டு இதடங்கலும் மற்றும் காணிகளுக்குமுரிய தண்ணீர்ப் பங்கும் மேற்சொல்லிய கிணற்றில் வழிவாய்க்கால் உருத்தும் பிற நீங்கலாக. பதிவு யாழ்ப்பாணம் K 163/62

ஷெ யூர் 'மரவன்புலம்' பர நில இலா 15 கிணறு தென்னைமரங்களுடன் இதற்கெல்லை கிழக்கு முத்துக்குமாரு செல்லமுத்துவுக்குரிய ஆதனம், வடக்கு கணபதி சின்னட்டியினுதனம் மேற்கு தம்பையா பெண் ராசமணிக்குரியவாதனம், தெற்கு சாவணமுத்து பெண் சின்னததங்கத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் இதடங்கலில் பிரிவிடப்படாத பர. நில. இலா, 10 பதிவு யாழ்ப்பாணம். K 114/109

14, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்,
15-9-70

அ. போ. எதிர்மனசிங்கி
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.
எம் 287 2-10-70.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டில்

1. கொக்குவில், குமாரசுவாமி இராசலிங்கம்
2. ஷெ யூர் பெண் சரஸ்வதி —வழக்காளிகள்
வழ: இல. M B 8178 எதிராக
கோண்டாவில் சின்னத்துரை சுப்பிரமணியம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8178-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிககப்படும் ஒரு துண்டுக் காணியை 1970-ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 28-ஆம திகதி (28-10-70) புதன்கிழமை மூற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 4175-00ம் 19-5-1966 தொடக்கம் 30-7-67 வரைக்கும் ரூபா 3000/-க்கு 10வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 395-36 சதம் இதில் ரூபா 1000/- கொடுபட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணம் பகுதி நல்லூர்க் கோவிற்பற்று கோண்டாவிலிறை 'நாவத்தனை'' பா. நி. இலா. 7 இதில் வடமேற்குப் பக்கமாய்ப் பா. நி. இலா. 2 குழி 11ம், தெற்குப் பக்கமாய் பா. நில இலா. 1 குழி $1\frac{1}{4}$ பாதை நிலமும் பிற நீக்கலாக மேற்குப் பக்கம் நிந்தமாய் பா. நி இலா. மூன் குழி ஐந்தே முக்கால் (பா நி. இலா. 3 குழி $5\frac{3}{4}$) இந்த பா. நி. இலா. 3 குழி $5\frac{3}{4}$லும் வீடும் வடக்கெல்லை காணியிலிருக்கும் கிணற்றுப் பாகமும், வழிவாய்க்காலுரித்தும் துரவைப் பாகமும் கிணற்றில் பொருத்தப்பட்டிருக்கும் தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தின் பாகமும் எல்லை கிழக்கு மகாதேவன் பெண் விஜயலெட்சுமிக்குரிய வாதனம் வடக்கு பூபாலசிங்கம் மனைவி பெண் நாகேஸ்வரிக்குரிய ஆதனம், மேற்கு கந்தையா பெண் சரஸ்வதிக்குரிய ஆதனம், தெற்கு பாதை நிலம், இதடங்கலும். பாதைப் பாவிப்புரித்தும் இதன் பதிவு D. 294/61

காரைநகர் வை. ஏரம்பமூர்த்தி
1970-ம் ஆண்டு புரட்டாதிமீ 14-ம் திகதி. ஏல விற்பனையாளரும்.
எம்.288 2-10-70 கொமிசனரும், விலைமதிப்பாளரும்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சுளிபுரம், நாராணபிள்ளை பேரம்பலம் —வழக்காளி
இல: M B 7586 எதிராக
சங்கானை கிழக்கு 1. கார்த்திகேசு நாகரத்தினமும் பெண்
2, சிவபாக்கியமும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B 7586-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1970-ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 5-ம திகதி (5-11-70) வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிகுள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— ரூபா 2000/-ம், 30-7-65 தொடக்கம் 29-1-1969 வரைக்கும் ரூபா 1500/-க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத்தீர்வைத் தொகைக்கும் பணம் முற்ருக இறுபடும் வரைக்கும 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 297-75 சதமும் இவற்றில் ரூபா 1000/- கட்டப்பட்டுள்ளது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானை கோயிற்பற்று சங்கானைகிழக்கு இறை 'சாயுடை' (Chaudai) நிலப்பரப்பு 8 கிணறும் பனைகளும் எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு வல்லிபுரம் செல்லையாவுக்கும். அம்பலவாணசுவாமி கோயிலுக்குமுரிய ஆதனம். மேற்கு சிதம்பரம் அம்பலவாணசுவாமி கோவிலாதனம், தெற்கு பொன்னுத்துரை பெண் இராசம்மாவின் ஆதனம். இதடங்கலும் யாழ்ப்பாணம் காணிப் பதிவுக் கந்தோரில் E. 267/67ல் பதியப்பட்டது

மல்லாகம்.
28-9-70

செ. பாண்டித்துரை
கொமிஷனர், விலைமதிப்பாளர்,
உத்தரவுபெற்ற ஏலதாரர்.
Commisioner of Sales, & Auctioner & Values,

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி விண்ணப்ப கோர்ட்டில் (Court of Requests)
வழக்கு இல: 2025 (C. R.)

கந்தையா ஐயாத்துரை மீசாலை வடக்கு, —வழக்காளி
எதிராக
1. அம்பலவாணர் செல்லையாவும் மனைவி
2. இராசம்மா சாவகச்சேரி தெற்கு. —எதிராளிகள்

சாவகச்சேரி விண்ணப்ப கோட்டின் 2025 (C. R.) இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1970ம் ஆண்டு ஐப்பசி மாதம் 23-ம் திகதி (23-10-70) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 246 சதம் 15ம், 10-9-68 தொடக்கம் 5-6-69 வரைக்கும் ரூபா 200/-க்கு நூற்றுக்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் நூற்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 42ம், 58 சதமும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று சாவகச்சேரி "பன்னந்தில வளவும்' 'துரவடி வளவும்'' நிலப்பரப்பு வரகுச் செய்கை 11, (11, Lms. V. C.) இதில் கிழக்குப் பக்கமாக நிலப்பரப்பு வரகுச் செய்கை 2 (2 Lms V C.) எல்லை கிழக்கும் வடக்கும் புறநாக விடப்பட்ட ஒழுங்கை, எல்லை மேற்கு நல்லதம்பி இராசையாவின் ஆதனம், எல்லை தெற்கு சாவணமுத்துவின் மனைவி தங்கம்மாவின் ஆதனம், இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும்.

Regd F 382/136

"நித்திபகல்யாணி"
பலாலி ரோட்.
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம், 25.9.70.

அ. சிவானந்தன்
கொமிஷனர் & விலை மதிப்பாளர்
எம். 289 2-10-70

திருவிளையாடற்புராணம் 3.

# இந்திரனுக்கு வந்த இடர்

(தெல்லியூர் பிரம்மஸ்ரீ வ. குகசர்மா அவர்கள்.)

பசு நல்வினை மிகுதியாகச் செய்தவர்கள் தேவர்களாகப்பிறப்பார்கள்; அவர்கள் இன்பத்தையே அதிகம் விரும்புவார்கள். இறைவனிடத்திலே உண்மையான பற்றுடையவர்கள் அல்ல. ஆனால் தாம் இன்பத்தைப் பெறவேண்டி இறைவனை வணங்குவார்கள். இதனை மணிவாசகர்

"வாழ்த்துவதும் வானவர்கள்
தாமவாழ்வான் மனமநின்பால்
தாழ்த்துவதும் தாம் உயர்ந்து
தம்மை எல்லாம் தொழ
வேண்டி"

என்று திருவாசகத்தில் கூறியிருக்கிறார்.

இவ்வாறாகிய தேவர்களுக்கு அரசன் இந்திரன். தான் செய்த நல்வினைப் பயனால் தமக்குக் கிடைத்த செல்வத்திலும் இன்பத்திலும் மயங்கி இந்திரன் நீதி முறைகளிற் தவறிவிட்ட பிழைகள் மிகப்பல. அதனால் அவனுக்கு வந்த துன்பங்களும் அநேகம். திருவிளையாடற் புராணத்திலே, குரவனை இகழ்ந்த பாவத்தால் ஏற்பட்ட பழியும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வேறு துன்பங்களும், சோமசுந்தரப் பெருமான் அருளால அப்பழி தீர்ந்தமையும எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ஒருநாள இந்திரன தேவப் பெண்களின் நடனத்தை நோக்கியும, அவர்களது நாவலிருந்து அமுதமன்ன பாடல்களைக்கேட்டும் மனமமகிழ்ந்திருந்தான.

அப்போது தேவகுருவாகிய வியாழ பகவான் இந்திரன் இருந்த சபைக்கு வந்தார். அவர் படம் பொருந்திய சர்ப்பத்தை ஆபரணமாக அணிந்த சிவபெருமானைப் போன்று பெருமையுடையவர் அன்றியும் குரவனை இறைவனுக்கு வணங்குதல் இயல்பு ஆதலால் இந்திரனே பெண்களின் ஆடல் பாடல்களில் மயங்கி யிருந்தானுகையால் குரவனை எழுந்து முறைமையாக வணங்கவில்லை. இந்திரனின் இந்த நிலையையும் காரணத்தையும பின் வரும் பாடலில் பரஞ்சோதி முனிவர் எடுத்துக் காட்டுகிறார்:-

"பையரா வணிந்த வேணிப்
பகவனே யனையதங்கள்
ஐயனும விழாப பத்தே
ளாயிடை யடைந்தா னாகச்
செய்தாள் வழிபா டின்றித
தேவர்கோ னிருந்தா
னாதோ
தையலார் மயலிற் பட்டோர்
தமக்கொரு மதியுண்
டாமோ"

இந்திரன மனநிலையுணர்ந்த வியாழ பகவான் திரும்பிச் சென்றுவிட குரவனையிகழ்ந்த பாவத்தால இந்திரனுடைய செல்வம் குறையத தொடங்கியது. இந்திரன் தான் செய்த பிழைக்கு வருந்தியவனாகி வியாழ பகவானை எங்கும் தேடினான். ஆனால அவரை எங்கும காணவில்லை. இந்திரன பிரமதேவரிடம் சென்று முறையிட்டான்.

பிரமதேவர் இந்திரனை நோக்கி "உனது குருவை நீ காணும வரையும் துவட்டா எனபவனின் புதல்வனாகிய விச்சுவ உருவன் என்பவனை குருவாகக் கொள்ளுதி" எனக் கூறினான். விச்சுவ உருவன் அசுரகுலத்தவன் ஆனால் மிகுந்த அறிவுடையவன பிரமதேவரது சொற்படி இந்திரன்விச்சுவ உருவனை குருவாகக் கொண்டான்

விச்சுவ உருவன் ஓர் யாகஞ் செய்தான் வெளியில் "தேவர்களுக்கு நலன் உண்டாக" எனக் கூறிக் கொண்டு அசுரர்கள நலம கருதி யாகம் செய்தான் அதனை அறிந்த இந்திரன் தன் குலிசாயுதத்தினால் அவனைக் கொன்றான.

துவட்டா தன் புதல்வன் இந்திரனால் கொல்லப்பட்டதையறிந்து கவலை கொண்

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

கஹுத்துறை ஸ்ரீகதிர்வேலாயுத

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

வங்களைப் பெற்று நல்வாழ்வு வாழ்கின்றனர்.

இவ்வாலயத்தில் சேவை செய்வதற்கெனத் தொண்டர் சபையொன்று இயங்குகின்றது

ஸ்ரீ கதிர்வேலாளைத் தினமும் வணங்குவார்க்குப் பொருட் செல்வம், கல்விச் செல்வம் முதலானவை வந்தணையும் என்பதனை,

"செல்வமும்
கல்வியும் நஞ்சினில்
மேலிடுமென்
பாலான ஞானமும் பத்தியுட்
சித்தியும் பற்றுதுணைக்
கோலாவ பொன்னரும்
பேறும் பொருந்திடும்
கூடியசீர்
வேலாபுரக் கதிர்வேலானைச்
சந்ததம் வேண்டினர்க்கே"

என்ற செய்யுள் மூலம் ஓரடியார் பெருமானின் பெருமையை இயம்பியுள்ளார். நாமும் ஸ்ரீ கதிர்வேலாயுதப் பெருமானை வணங்கி உய்வோமாக —

## அழுத பிள்ளை……?



பக்தர்: "நவராத்திரி விரதகாலத் தேவைக்கு சுண்டலுக்குதவும் கொண்டல்கடலைக்குப் பெருந் தட்டுப்பாடாயிருக்குதே! சைவ மக்களுக்கு இது எவ்வளவு கஷ்டம் என்பதை யார்தான் சிந்திக்கிறாங்க பாருங்கோ ?"

சித்தர்: "அழுதபிள்ளை பால் குடிக்கும்" என்று கூறுவதை அறியாதவர்போலப் பேசுறீர்களே நமது தேவைகள் என்ன? குறைகள் என்ன? என்பவைகளை அலசி ஆராய அதிகாரிகளுக்கு எங்கே நேரங் கிடைக்கப்போகிறது? நாம் முறையிட்டாற் பயன் விளையுந்தானே?

"நாயன்மார் — நாதன்"

### பிழை திருத்தம

சென்ற 25-9-70 இல் வெளிவந்த இந்துசாதனத்தில் கொமிசனர் திரு சி. சங்கரப்பிள்ளை J.P. அவர்கள் வெளிப்படுத்திய M. B 10029-ஆம் இலக்கக் கோட்டு விற்பனவு விளம்பரத்தில் விற்பனவுத தேதி 27-10-70 என்றிருப்பதை 24-10-70 என்று திருத்தி வாசிக்கக் கோருகிறோம



உ
சிவமயம்

# நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்

## 31-3-70 வரையுள்ள ஐந்தொகை

| | | ரூபா. சதம். | ரூபா. சதம். |
|---|---|---|---|
| திரண்ட நிதி | | | |
| 1-4-70 இல் பாக்கி | | 387,630-09 | |
| இவ்வாண்டு செலவிலும் பார்க்க மேலதிக வருமானம் | | 36703-17 | 424333-26 |
| கடைமுறைக் கடன்கள்:— | | | |
| தொழிலாளர் பிணைப் பணம் | | 500-00 | |
| கடன் உதவியோர் | | 486-00 | 986-00 |
| | | | 425319-26 |
| நிலையான சொத்து } கொள்விலைப்படி | | இவ்வாண்டு கூடியது | |
| காணி 1-4-69 | 4,225-00 | 10,530-55 | 14755-55 |
| கட்டடங்கள் | 78177-00 | 30040-19 | 108217-19 |
| கோவில்தள வேலை | 9299-93 | | 9299-93 |
| மின்சார நிலையம் | 22351-69 | | 22351-69 |
| மின்சாரம் பொருத்துதலும் புதுப்பித்தலும் | 14377-98 | | 14377-98 |
| தேரும், வாகனமும் | 134443-10 | | 134443-10 |
| தேர் சப்பற திணைப்பு | 41970-26 | 8982-14 | 50952-40 |
| விக்கிரக மூர்த்தி | 4336-60 | | 4336-60 |
| தளபாடமும் துணை உறுப்புகளும் | 28192-31 | | 28192-31 |
| நகைகள் | 17229-68 | | 17229-68 |
| வெள்ளி இருப்பு | 10243-75 | | 10243-75 |
| கால் நடை | 208-00 | | 208 00 |
| ரூபா | 365065-30 | 49562-88 | 414608-18 |
| நடைமுறை இருப்பு: கடன்காரர் | | 1912-43 | |
| மெர்க்கண்டயில் வங்கி யாழ்ப்பாணம் | 8771-74 | | |
| கையிருப்பு | 26-91 | 8798-65 | 10711-08 |
| | | | 425319-26 |

### வரவு செலவுக் கணக்கு
31—3—70 முடிய

| | | |
|---|---|---|
| சம்பளமும் கூலியும் | | 23785-81 |
| அச்சுவேலையும், காகிதாதிகளும் | | 1301-43 |
| கட்டடம், தேர், தளபாடம் பராமரிப்பு | | 3235-69 |
| யந்திரமும், மின்சாரம் பராமரிப்பும் | | 2769-20 |
| பிரயாணச் செலவு | | 325-50 |
| பூந்தோட்டம் பராமரிப்பு | | 64-12 |
| கால் நடைப் பராமரிப்பு | | 109-50 |
| தபால், தந்தி முதலியன | | 676-69 |
| திருவிழாச் செலவு | | 12236-84 |
| நெல்வயல் திருத்தச் செலவு | | 177-00 |
| சட்டசம்பந்தமான செலவு | | 19616-96 |
| செலவிலும் பார்க்க மேலதிக வருமானம் | | 36703-17 |
| | | 101001 91 |
| அர்ச்சனைப் பற்றுச் சீட்டு வரவு | | 23706 05 |
| அபிஷேக நிசிற்படி | 8112-45 | |
| கழிக்க செலவுகள் | 1888-53 | 6223-92 |
| திருவிழாப் படித்தர வரவு | | 3425-00 |
| உண்டியல் வரவு | | 14206-35 |
| காணிக்கை வரவு | | 38747-79 |
| வாடகை வரவு | | 3154-00 |
| பூசை ரொக்கவரவு | 15516-74 | |
| கழிக்க செலவுகள் | 10247-01 | 5269-73 |
| சந்தா வரவு | | 890-00 |
| திருப்பணி வரவு | | 3305-30 |
| வட்டி வரவு | | 241-23 |
| சில்லறை வரவுகள் | | 1832-54 |
| | | 101001-91 |

### வருமதிக் கடன்கள்
31—3—70

| | | |
|---|---|---|
| T. கிருஷ்ணசாமி | நயினாதீவு | 402-50 |
| R. குமரையா | " | 463-00 |
| K. சிவசிதம்பரம் | " | 181-38 |
| S. துரைச்சாமி | " | 237-00 |
| K சோமசுந்தரம் | " | 48-80 |
| N சந்தையா | யாழ்ப்பாணம் | 250-00 |
| T. அமிர்தலிங்கம் | நயினாதீவு | 95-75 |
| P. சந்தசாமி | " | 34-00 |
| S. இராசையா | யாழ்ப்பாணம் | 200-00 |
| | | 1912-43 |

### கடன் செல்மதி
31-3-70 முடிய

| | | |
|---|---|---|
| S பரமேஸ்வரக் குருக்கள் | | 449-00 |
| K. K. கந்தையா | யாழ்ப்பாணம் | 37-00 |
| | | 486-00 |

தருமபரிபாலனசபை
நயினாதீவு. ஸ்ரீ நாகபூஷணியம்மன் கோவில்

கௌரவ கணக்குப் பரிசோதகர்:-
சச்சிதானந்த, சோக்மன் விஜயரத்தின அன் கோ
கொழும்பு எம். 291 2-10-70

### கோட்டு விற்பனவு விளம்பரம்

நாகலிங்கம் மகள் வள்ளியம்மை, சரவணை —வழக்காளி
இல: M. B. 10424 எதிராக
சுந்தரம்பிள்ளை இராசரத்தினம், வேலணை கிழக்கு —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10424ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விவரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970ம் ஆ நவம்பர் (கார்த்திகை) மாதம் 5-ம் திகதி (5-11-70) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 2350/-ம், 7-11-68 தொடக்கம் 25-6-69 வரைக்கும் ரூபா 2000/-க்கு 15 வீத வட்டியும அதன்பின் இறுக்குமவரை முழுத்தொகைக்கும் 5 வீத வட்டியும கோட்டுச்செலவு ரூபா 393-35 சதமும இவ் கோட்டுச் செலவாக கொடுக்கப்பட்ட ரூபா 125/-ம், அதன்பின் 20-3-70ல் கொடுக்கப்பட்ட ரூபா 500/-ம குறைக்கப்படும

ஆதன விபரம்

வடமாகாணம யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி வேலணை கோவிற்பற்று வேலணை கிழக்கிலுள்ள "நாவலிய வயல்" தெற்பரப்பு 210 (Lms P. C.) இதில் கிழக்குப் பக்கமும் மேற்கு பக்கமும் தெற்குப் பக்கமுமாக அரசாங்கத்துக்கு விளையாட்டு மைதானத்துக்காக விற்கப்பட்ட தெற்பரப்பு 142 (Lms P.C. கழித்து மிகுதியாகவிருக்கும் பிரித்துவிடப்பட்ட தெற்பரப்பு 68 (Lms P. C.) எல்லை கிழக்கு கனகரத்தினம் பெண் பாக்கியலெட்சுமிக்கும், அருணாசலம் சிவகுருநாதருக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனங்கள், வடக்கும் மேற்கும சுந்தரம்பிள்ளை சிவரத்தினத்தின் ஆதனம், தெற்கு வேலணைக் கிராமச்சபைக்குரிய விளையாட்டு மைதானம், இது யாழ்ப்பாணம் C. 350 / 282ல் இடாப்பதிவப்பட்டது.

கு. சரவணமுத்து
கொமிசனர் & விலைமதிப்பாளர்
173, குருசோவீதி, கண்டிக்குளி யாழ்ப்பாணம். 27-9-70
எம். 292 2-10-70

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 2—10—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்